# கனவுகளுக்குப் பலன்

## அகழி

அகழியில் நீர் ததும்பி வழிவதுபோல் கனவு கண்டால்: உங்களை எதிர்க்கும் பகைவர்கள் தாங்களாகவே அடங்கி ஒடுங்கிவிடுவார்கள். நீங்கள் அவர்களைப்பற்றிய கவலைகளை விட்டுவிட்டு, உங்கள் காரியங்களை நீங்கள் கவனித்துக் கொண்டே இருக்கலாம்.

அகழியில் சிறிது அளவே நீர் இருப்பதுபோல் கனவு கண்டால்: பகைவர்களைப் பற்றி நீங்கள் மிகவும் எச்சரிக்கை யுடன் இருக்க வேண்டும். அவர்களைச் சமாளிப்பதற்கான துணைகளை நீங்கள் உடனடியாகத் தேடிக்கொள்ள வேண்டும்.

அகழியில் நீர் இல்லாமல் வறண்டு இருப்பதுபோல் கனவு கண்டால்: பகைமையைப் பாராட்டாமல் நீங்களே எதிரிகளிடம் போய் நட்பு கொண்டு விடுவது நல்லது. அல்லது, எவராவது ஒரு நடுநிலையாளரின் துணையோடு தகராறுகளை தீர்த்துக் கொள்வதற்கு வேண்டிய முயற்சிகளை நீங்களே செய்ய வேண்டும்.

குறிப்பு: பண்டைக் காலத்தில் கோட்டைகளைச் சுற்றிலும் அவற்றின் பாதுகாப்புக்காக ஒரு செயற்கையான நீர் நிலையை அமைப்பது வழக்கம். இதுவே அகழி எனப்படுவது.

## அசுத்தம்

உங்கள் உடலில் மிகவும் அழுக்கு ஏறியிருப்பதுபோல் கனவு கண்டால்: விரைவில் உங்களுக்குத் திருமணம் நடக்கும். அல்லது ஒரு புதிய காதல் உறவு ஏற்படும். அப்படி ஏற்பட்டால் அது திருமணமாக நிறைவு எய்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது. நீங்கள் திருமணம் ஆனவர்களாக இருந்தால், உங்கள் வீட்டில் திருமணம் விரைவில் நடக்கும்.

உங்கள் தலையில் அழுக்கு ஏறியிருப்பதுபோல் கனவு கண்டால்: நீங்கள் உங்கள் உடல்நலத்தைக் கவனமாகப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக, உடலுக்கும் குடலுக்கும் பொருந்தாத உணவுகளை நீங்கள் உட்கொள்ளக் கூடாது.

உங்களை சுற்றிலும் அழுக்கும் தூசும் நிரம்பியிருப்பது போல் கனவு கண்டால்: நீங்கள் வீணான பழிச்சொற்களுக்கு ஆளாக நேரலாம். ஆகையால், இன்னும் சிறிது காலத்திற்கு உங்கள் காரியங்களை எல்லாரும் அறியும்படி வெளிப்படையாகவே செய்து வாருங்கள். எவருடனும் இரகசியமான சந்திப்புகளை வைத்துக்கொள்ள வேண்டாம்.

மலத்தை மிதித்துவிட்டதுபோல் அல்லது உடம்பில் மலம் பட்டுவிட்டதுபோல் கனவு கண்டால்: நீங்கள் சிறிதும் எதிர்பாராத நேரத்தில், நீங்கள் சிறிதும் எதிர்பாராத இடத்திலிருந்து, உங்களுக்குப் பணம் கிடைக்கும். உங்களுடைய சில முக்கியமான பிரச்சினைகள் இதனால் தீரும்.

புழுதிப்படலம் கண்ணை மறைப்பதுபோல் கனவு கண்டால்: நீங்கள் இதுவரையில் பாடுபட்டுத் தேடி வைத்திருக்கும் பொருளை, மிக விழிப்போடு பாதுகாத்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக, நாணயம் அற்ற நண்பர்களிடம் நீங்கள் கொடுக்கல் வாங்கல் வைத்துக்கொள்ளக்கூடாது.

புழுதிப்படலம் சூரியனை மறைப்பதுபோல் கனவு கண்டால்: ஆட்சி புரிந்துவரும் மந்திரிசபை கவிழக்கூடும். அல்லது, மந்திரிகளில் முக்கியமான ஒருவர் பதவி இழப்பார். பதவி இழக்காவிட்டால், அவருடைய உயிருக்கே ஆபத்து நேரலாம்.

## அசுரன்

ஓர் அசுரனை அல்லது இராட்சதனைக் கனவில் கண்டால்: உங்களுக்கு உள்ள சிரமங்கள் அனைத்தையும் உங்களுடைய கடுமையான உழைப்பினால் நீங்கள் போக்கிக்கொண்டு விடலாம். இப்போது நீங்கள் ஈடுபட்டுள்ள முயற்சிக்குக் கடுமையான உழைப்பு இருந்தால் நல்ல வெற்றி கிடைக்கும்.

உங்களை ஓர் அசுரன் தூக்கிச் செல்வதுபோல் கனவு கண்டால்: நீங்கள் ஒரு பெரிய இக்கட்டிலிருந்து விடுபடுவீர்கள். உங்கள் மீது தொடரப்பட்டுள்ள வழக்குகள் தள்ளுபடி ஆகும். உங்களுக்கு வேண்டியவர்கள் சிறையில் இருந்தால் அவர்கள் விரைவில் விடுதலை அடைவார்கள்.

உங்களை ஓர் அசுரன் பயமுறுத்துவதுபோல் அல்லது துன்புறுத்துவதுபோல் கனவு கண்டால்: நீங்கள் ஒரு புதிய முயற்சியில் ஈடுபடுவதற்கான சூழ்நிலைகள் உருவாகி வருகின்றன. அவற்றை நீங்கள் நழுவவிடாமல் துணிந்து செயலில் இறங்க வேண்டும். அது உங்களது கால முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும்.

ஓர் அசுரனை நீங்கள் நண்பனாகக் கொள்வதுபோல் கனவு கண்டால்: உங்களுக்கு ஒரு பெரிய அதிருஷ்டம் வரப்போகிறது. ஒரு பெரிய பணக்காரர் உங்களோடு தொடர்பு கொள்ளப் போகிறார். அவரோடு சேர்ந்து நீங்களும் ஒரு பணக்காரராகி விடலாம்.

குறிப்பு:

புராணக் கதைகளில் வரும் இரணியன் ஓர் அசுரன். இராவணன் ஓர் இராட்சதன். அசுரர்களையும் இராட்சதர் களையும் நீங்கள் நனவுலகில் காணமுடியாது. கனவில் காணலாம்.

## அடக்கம்

நீங்கள் மிகவும் அடக்கத்தோடு நடந்து கொள்வது போல் கனவு கண்டால்: வாழ்க்கையிலும் நீங்கள் அவ்வாறே நடந்து கொள்ளவேண்டும். குறிப்பாக, தற்பெருமையான பேச்சுகள், உங்களைச் சங்கடத்தில் மாட்டிவைக்கும். ஆகையால், தற்பெருமைகளை நீங்கள் தவிர்க்க வேண்டும்.

## அடிமை

நீங்கள் பிறருக்கு அடிமையாகிவிட்டதுபோல் கனவு கண்டால்: உங்களுடைய தீராத பழைய கடன் ஒன்று விரைவில் தீர்ந்து போய்விடும். அதே சமயத்தில் புதிய கடன்கள் கிடைப்பதற்கான வசதிகளும் ஏற்படும். ஆனால் கூடுமான வரையில் அந்தப் புதிய வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளாமல் இருப்பது நல்லது.

ஓர் அடிமை ஆள் உங்கள் உடம்பைப் பிடித்துவிடுவது போல் கனவு கண்டால்: இன்னும் சில வாரங்களில் உங்களுக்கு

ஏதாவது உடல்நலக் குறைவு ஏற்படலாம். ஆகையால், அதற்கு இடங்கொடுக்காதவாறு, நீங்கள் இப்போதே ஆரோக்கியமான பழக்க வழக்கங்களை கைக்கொள்ள வேண்டும். அத்துடன் டாக்டரிடம் போய் வைத்தியப் பரிசோதனை (Medical Check-up) செய்து கொள்வது நல்லது.

## அடைமானம்

ஒரு பொருளை அல்லது சொத்தை அடைமானம் வைப்பதுபோல் கனவு கண்டால்: நீங்கள் சிறிதும் எதிர்பாராத சில புதிய சிரமங்கள் உங்களுக்கு ஏற்படக்கூடும். அவற்றைத் தவிர்க்க வேண்டுமானால், பிறர் காரியங்களில் நீங்கள் தலையிடக் கூடாது. உங்கள் காரியங்களை மட்டும் நீங்கள் கவனித்துவர வேண்டும்.

## அணைக்கட்டு

ஓர் அணைக்கட்டைக் கனவில் கண்டால்: நீங்கள் பிறருக்கு வாக்குறுதிகள் அளிப்பதில் சற்று எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஏனென்றால் அந்த வாக்குறுதிகளை உங்களால் நிறைவேற்ற முடியாமல் போகலாம். அதனால், வீணான மனவருத்த்ங்களுக்கு நீங்கள் ஆளாகலாம். இப்போதைக்கு இன்றியமையாத கடமைகளை மட்டும் நீங்கள் நிறைவேற்றினால் போதும்.

அணைக்கட்டு உடைந்து விட்டதுபோல் கனவு கண்டால்: நாட்டில் ஏதாவது பெருங்கிளர்ச்சிகள் ஏற்படும். அதனால் பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படும். அல்லது கொள்ளை நோய்களால் உயிர்ச் சேதங்கள் ஏற்படலாம். ஆகையால், நீங்களும் உங்கள் குடும்பத்தில் உள்ளவர்களும் நோய் தடுப்பு ஊசிகளைப் போட்டுக் கொள்வது நல்லது.

## அதிருஷ்டம்

உங்களுக்கு ஏதோ அதிருஷ்டம் அடித்திருப்பதுபோல் கனவு கண்டால்: பிறருடைய பணத்தைக் கையாளுவதில் நீங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால், உங்கள் கையைவிட்டுப் பணத்தை இழக்கும்படி நேரலாம். ஆகையால், கூடுமானவரையில் பணப்பொறுப்புள்ள காரியங்களில் ஈடுபடாமல் இருப்பது நல்லது.

## அநாதை

ஓர் அநாதைச் சிறுவனைக் கனவில் கண்டால்: நீங்கள் முன்பின் அறியாத அந்நியர் ஒருவர், விரைவில் உங்களுக்கு அறிமுகம் ஆவார். அவரால் உங்களுக்கு அரிய பெரிய உதவிகள் கிடைக்கும். அதன் மூலம் அவர் உங்களுடைய நல்லது கெட்டதுகளில் பங்கு கொள்பவராக ஆவார்.

## அந்தணர்

அந்தணரைக் கனவில் கண்டால்: விரைவில் சில சுப காரியங்களுக்காகச் செலவு வந்து சேரும். குறிப்பாக, உள்ளூரில் விசேஷங்கள் செய்வதும், அயலூர்களுக்குச் செல்லுவதும், அங்குள்ள ஆலயங்களில் வழிபடுவதும், புண்ணிய நதிகளில் நீராடுவதும் நிகழக்கூடும்.

குறிப்பு : அந்தணர் என்போர் பிராமணர்.

## அமிருதம்

அமிருதத்தை அருந்துவதுபோல் கனவு கண்டால்: உங்கள் உடல்நலத்தை நீங்கள் மிகவும் கவனத்தோடு பாதுகாத்துக் கொள்ள வேண்டும். விபத்துகளுக்கு ஆளாகக்கூடிய

வாய்ப்புகளைத் தவிர்க்க வேண்டும். எடுத்துக்காட்டாக, இரவு நேர பயணங்களை இன்னும் சிறிது காலத்துக்கு நீங்கள் மேற்கொள்ளக்கூடாது.

குறிப்பு :

அமிர்தம் என்பது தேவர்கள் தாங்கள் இறவாமல் இருப்பதற்காகப் பாற்கடலைக் கடைந்து எடுத்த ஓர் அருமருந்து. இப்போது இதைக் கனவுகளில் மட்டுமே தான் காண முடியும்.

## அயல்நாடுகள்

நீங்கள் அயல்நாடுகளுக்குச் சென்றிருப்பதுபோல் கனவு கண்டால்: உங்களுக்கு உரிமை இல்லாத பொருள்களின் மீது ஏற்படும் தவறான ஆசைகளுக்கு நீங்கள் இடம் கொடுக்கக்கூடாது. காரணம், அவை எல்லாம் கானல்நீர் போன்றவை. நெருங்கிப் பார்த்தால் இங்கு துன்பம் தான் இருக்கும். இன்பங்கள் எல்லாம் நம் இல்லத்திலே தான் இருக்கின்றன.

## அயல்நாட்டுத் தூதர்

நீங்கள் ஓர் அயல்நாட்டுத் தூதராக நியமனம் பெற்றது போல் கனவு கண்டால்: உங்கள் பணத்தைப் புதிய முதலீடுகளில் பயன்படுத்துவதற்கு உரிய வாய்ப்புகள் ஏற்படும். அந்த முதலீடுகளை நீங்கள் மிகவும் கவனத்தோடு செய்ய வேண்டும். புதிதாகப் பழக்கமான புதியவர்களை இது தொடர்பாக நம்பக் கூடாது.

ஓர் அயல்நாட்டுத் தூதராலயத்தைக் கனவில் கண்டால்: நீங்கள் ஏதாவது ஒருவகையான சமூகத்தொண்டில் ஈடுபட கட்டாயம் ஏற்படும். அல்லது ஏதாவது ஒரு பொது நலப்பணியில் பங்கு கொண்டு அதில் பெரும் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள வேண்டியது இருக்கும்.

## அரண்மனை

ஓர் அரண்மனையைக் கனவில் கண்டால்: சிறிய மனிதர்களோடு நட்புக் கொள்ளாதீர்கள். அவர்களால் உங்களுக்கு தடங்கல்கள் ஏற்படக்கூடும். நீங்கள் எப்பொழுதுமே பெரிய தூதர்களைதாம் துணை கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட ஒருவரிடமிருந்து, விரைவில் உங்களுக்கு ஓர் உதவி கிடைக்கும்.

நீங்களே ஓர் அரண்மனையில் வசிப்பதுபோல் கனவு கண்டால்: நீங்கள் உங்கள் விருப்பம்போல் நடக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படும். ஆகையால், பிறர் தயவை எதிர்பார்த்தேயாக வேண்டிய காரியங்களைச் சிறிது காலத்துக்கு ஒத்திப்போடுவது நல்லது.

ஓர் அரசன் அல்லது அரசியைக் கனவில் கண்டால்: இதுவரையில் உங்களுடைய அருமை பெருமைகளை அறியாமல் இருந்தவர்கள், இனிமேல் அறிந்துகொள்வார்கள்! நீங்கள் விரைவில் பணக்காரர் ஆகி, இலாபகரமான தொழில் முயற்சியில் ஈடுபடுவீர்கள்.

ஓர் அரசன் அல்லது அரசி தெருவில் பவனி வருவது போல் கனவு கண்டால்: குடும்பத்தில் சிறிது அமைதியின்மை ஏற்படும். ஆகையால் வீட்டில் மனைவி, மக்கள், வேலைக்காரர்கள், விருந்தினர்கள், உறவினர்கள் ஆகியோருடன் கூடுமானவரையில் இணங்கிப் போவது நல்லது.

குறிப்பு:

பவனி வருதல் என்றால் யானை, குதிரை, பல்லக்கு இவற்றின் மீது அமர்ந்து ஊர்வலம் வருதல்.

ஓர் அரசன் அல்லது அரசியின் முடிசூட்டு விழாவைக் கனவில் கண்டால்: உங்கள் வாழ்க்கையின் குறிக்கோள் எவ்வளவு

பெரியதாக இருந்தாலும், அது விரைவில் நிறைவேறிவிடும். உங்கள் எதிர்காலம் மிகவும் இன்பமானதாய் இருக்கும்.

ஓர் அரசன் அல்லது அரசியின் சவ ஊர்வத்தைக் கனவில் கண்டால்: விரைவில் ஒரு பெரிய சொத்துக்கு நீங்கள் வாரிசு ஆகப்போகிறீர்கள். அந்தச் சொத்தை உங்களுக்குத் தரப்போகும் முதியவரிடம் நீங்கள் மிகவும் பணிவோடு நடந்துகொள்ள வேண்டும். அவர் யார் என்பதை நீங்களே ஊகித்துக்கொள்ள முடியும்.

ஓர் இளவரசனைக் கனவில் கண்டால்: உங்களுக்கு நல்ல அதிருஷ்டம் இருக்கிறது. ஆனால், உங்களைக் கண்டு பொறாமைப்படும் நண்பர்களும் உங்கள் கூடவே இருக்கிறார்கள். அவர்களை உங்களால் அறவே விலக்கி விடவும் முடியாது. ஆகையால், மிகவும் விழிப்போடு இருப்பது ஒன்றுதானே வழி?

ஓர் இளவரசியைக் கனவில் கண்டால்: உங்கள் நெடுநாளைய ஆசை ஒன்று நிறைவேறும். அதே சமயத்தில் நீங்கள் யாரிடத்தில் மிகவும் ஆசையோடு நேசம் கொண்டு இருக்கிறீர்களோ, அவர்களோடு சிறிது தகராறுகள் ஏற்பட்டுப் பிறகு சரியாகிவிடும்.

ஓர் அரசாங்க அதிகாரியைக் கனவில் கண்டால்: உங்களுக்கு ஓர் எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். அதே சமயத்தில், உங்களுக்குப் பணம் தரவேண்டியவர்கள் சாக்குப்போக்கு சொல்லிக் காலம் கடத்தப் பார்ப்பார்கள். ஆகையால், கொடுக்கல், வாங்கல்களில் மிகவும் விழிப்போடு நடந்துகொள்ள வேண்டும்.

## அரசியல்

நீங்கள் அரசியலில் ஈடுபடுவதுபோல் கனவு கண்டால்: நெருங்கிய உறவினர் ஒருவர் உங்களுக்குப் பகைவராக மாறக்கூடும்.

ஆகையால், இன்னும் சிறிது காலத்துக்கு நீங்கள் எந்த உறவினரிடமும் உங்கள் அந்தரங்கங்களை வெளியிடக்கூடாது. இயன்றவரையில் எவரிடமும் தகராறுகளை வளர்த்துக்கொள்ளக் கூடாது.

## அராபியர்

அராபியரைக் கனவில் கண்டால்: தொழில் துறையில் உங்களுக்கு ஒரு புதிய தொடர்பு ஏற்படப் போகிறது. ஒரு நல்ல மனிதர் உங்கள் கூட்டணியாகச் சேருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அவரால் உங்கள் இலாபம் பெருகும்.

### குறிப்பு:

அராபியர் என்றால், அரபு நாட்டைச் சேர்ந்தவர்.

## அருவருப்பு

நீங்கள் எதையேனும் பார்த்து அருவருப்பு அடைவது போல் கனவு கண்டால்: வெளிப்பார்வைக்கு நண்பர்களைப் போல் நடித்துக்கொண்டு, உள்ளூர உங்கள் மீது பகைமை கொண்டவர்கள் உங்கள் கூடவே இருக்கிறார்கள். அவர்களை நீங்கள் இனம் கண்டு, ஒதுக்கிவிட வேண்டும்.

## அலங்காரம்

உங்களை நீங்களே அலங்கரித்துக்கொள்வதுபோல் கனவு கண்டால்: உங்களுடைய வியாபாரத்தில் திடீர் என்று நஷ்டம் ஏற்படக்கூடும். அப்படி ஏற்பட்டால், அதை நீங்கள் எவரிடமும் வெளியே சொல்லாமல் இரகசியமாக வைத்திருக்க வேண்டும். சிறிது காலத்தில் அந்த நஷ்டத்தை ஈடுசெய்யும் அளவுக்கு வியாபாரத்தில் இலாபம் வரத்தொடங்கிவிடும்.

பிறர் தங்களை அலங்கரித்துக்கொள்வது போல் கனவு கண்டால்: உங்கள் கூட்டாளி உங்களை மோசம் செய்யப்

பார்க்கிறார். அல்லது, உங்களுக்கு உதவி செய்வதாக வாக்களித்த ஒரு நண்பர், உங்களைக் கடைசி நிமிஷத்தில் கைவிட்டு விடுவார். ஆகையால் அத்தகையோரிடம் நம்பிக்கை வைக்காமல், நீங்கள் விழிப்போடு இருக்க வேண்டும். வேறு முயற்சிகளைச் செய்ய வேண்டும்.

## அவசரம்

நீங்கள் எதற்காவது அவசரப்படுவதுபோல் கனவு கண்டால்: உங்களுக்கு மிகவும் நெருக்கமான யாரோ ஒருவரைப் பற்றி நீங்கள் தவறான கருத்துக் கொண்டிருக்கிறீர்கள். அவர் உண்மையிலேயே உங்களிடம் அன்பு உள்ளவர். அவரைத் தவறாக மதிப்பதால், நீங்கள் சில கவலைகளுக்கு ஆளாக நேரிடலாம். அந்தக் கவலைகளை விடுத்து, அவர் மீது நீங்கள் முன்போலவே நம்பிக்கை வையுங்கள்.

## அவதூறு

உங்களால் யாருக்காவது பழிச்சொல் ஏற்படுவது போல் கனவு கண்டால்: நீங்கள் மதிப்பு உயர்ந்ததாகக் கருதும் ஒரு நட்புக்கு, பங்கம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. ஆகையால், இன்னும் சிறிது காலத்துக்கு, நீங்கள் விழிப்போடு நடந்துகொள்ள வேண்டும். எந்த நண்பரும் உங்களிடம் குறை காண்பதற்கு நீங்கள் இடம் கொடுக்கக்கூடாது.

நீங்கள் யாரையாவது அவதூறாகப் பேசுவது போல் கனவு கண்டால்: உங்கள் உள்ளத்தில் ஏதோ குற்ற உணர்ச்சி ஒளிந்து கொண்டு இருக்கிறது. அது வெளியே தெரிந்தால், பிறர் உங்களை இழிவாக நினைப்பார்களே என்று நீங்கள் பயப்படுகிறீர்கள். உங்களுக்கு அந்தக் கவலையே வேண்டியது இல்லை. ஏனென்றால் அது வெளியே தெரியப்போவது இல்லை.

குறிப்பு:

அவதூறு என்றால், ஒருவரைக் காணாத இடத்தில் அவர் மீது பழி சுமத்திக் கண்டபடி பேசுவது.

## அவநம்பிக்கை

நீங்கள் யாரிடத்திலாவது அவநம்பிக்கை கொள்வது போல் கனவு கண்டால்: நீங்கள் ஏதோ ஒரு தவறான காரியத்தைச் செய்ய ஆசைப்படுகிறீர்கள். உங்களுடைய அந்த ஆசை வேறு எவருக்கும் தெரியாது எனவும் எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். தவறு. அது தெரியும். உங்களுடைய செயல்கள் உங்களுக்குத் தெரியாமலே கவனிக்கப்படுகின்றன. ஆகையால், நீங்கள் தவறான பாதையை விட்டு, நேரான பாதைக்கு வாருங்கள்.

## அவமரியாதை

நீங்கள் பிறரை அவமரியாதை செய்வதுபோல் கனவு கண்டால்: உங்களுக்கு இதுவரையில் கை கூடாமல் இருந்த காரியங்கள் இப்போது கைகூடும். அதற்காக நீங்கள் சிறிது நேர்மையற்ற முறையில் நடந்துகொள்ளக்கூடிய சூழ்நிலை உருவாகக்கூடும். அதற்கு இடம் கொடுக்காதீர்கள். சற்றுப் பொறுமையைக் கைக்கொண்டால், நேர்மையான வழியிலேயே நீங்கள் காரியத்தில் வெற்றி அடையலாம்.

உங்களைப் பிறர் அவமரியாதை செய்வதுபோல் கனவு கண்டால்: வாழ்க்கையில் பல சில்லறைத் தொல்லைகளுக்கு நீங்கள் ஆளாக நேரும். பிறர்மீது எரிச்சல் அடையாமல், எல்லாரிடமும் இயன்றவரையில் இனிய சொற்களையே பேசுங்கள். தொல்லைகள் தாமாகவே ஒழிந்துவிடும்.

வணக்கத்துக்கு உரிய பெரியோர்களை, அல்லது புனிதமான சின்னங்களை, நீங்கள் அவமரியாதை செய்வதுபோல் கனவு

கண்டால்: நீங்கள் முதலீடு செய்துள்ள மூலதனத்துக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. ஆகையால், நம்பகம் இல்லாத கம்பெனிகளில் உங்களுக்கு உள்ள பங்குகளைப் பணம் ஆக்கி விடுங்கள். விலை உயர்ந்த பங்குகளைப் பாங்கு லாக்கர்களில் பத்திரப்படுத்தி வைக்கவும். கைவசம் உள்ள சரக்குகளைப் பெரிய இலாபத்துக்கு ஆசைப்படாமல் உடனே விற்றுவிடுங்கள்.

## அழித்தல்

ஏதாவது ஒரு பொருள் அழிக்கப்படுவது அல்லது உடைக்கப்படுவதுபோல் கனவு கண்டால்: உங்களுக்கு உதவிபுரிய வந்திருப்பவரையே நீங்கள் சண்டை போட்டு விரட்டிவிடுவீர்கள். உங்களுடைய அவசர புத்தியே அதற்குக் காரணமாக இருக்கும். அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வரும் பழக்கத்தை, நீங்கள் முதலில் விட்டு ஒழிக்க வேண்டும்.

## அழுகிய பொருள்கள்

அழுகிய பொருள்களைக் கனவில் கண்டால்: உங்களுடைய தரத்துக்கும் கௌரவத்துக்கும் ஒவ்வாத காரியங்களில் பங்கு கொள்ளும்படி உங்களுக்குச் சில தூண்டுதல்கள் ஏற்படும். அவற்றுக்கு நீங்கள் வசப்பட்டுவிடுதல் கெடுதல். அந்த மாதிரி இடங்களுக்கும் நீங்கள் போகக்கூடாது. போனால் பிடிபட்டு விடுவீர்கள்.

## அழுகை

யாராவது அழுவதுபோல் கனவு கண்டால்: விரைவில் உங்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி கிடைக்கப்போகிறது. உங்களுடைய பொருளாதார நிலை உயர்வு அடையப்போகிறது. உங்கள் எதிர்காலம் மிகவும் இன்பமாக இருக்கப்போகிறது.

## அறிவுரை

நீங்கள் பிறருக்கு அறிவுரை கூறுவதுபோல் கனவு கண்டால்: உங்களுக்கு மிகவும் நெருங்கிய ஒருவரிடத்தில் நீங்கள் ஏதோ மனக்குறை வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். அதே சமயத்தில், உங்கள் மீதும் அவருக்கு மனக்குறை இருக்கிறது. இந்த நிலையை வளரவிடக்கூடாது. இருவரும் மனம்விட்டு பேசி, பழைய அன்பையும், கனிவையும் புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.

## அறுத்தல்

மரத்தை அறுப்பதுபோல் கனவு கண்டால்: ஒரு புதிய தொழிலைத் தொடங்குவதற்காக, அல்லது ஒரு புதிய சொத்தை உருவாக்குவதற்காக, நீங்கள் ஒரு பழைய சொத்தை விற்கும் படியான சூழ்நிலை ஏற்படலாம். அல்லது, உங்கள் பொதுக் குடும்பத்தை விட்டு, பாகம் பிரித்துக் கொண்டு வெளியேறுமாறு நேரலாம். இவ்விரண்டில் எது நேர்ந்தாலும், உங்கள் முன்னேற்றத்துக்கு அது உதவியாய் இருக்கும். ஆகையால், இதைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம்.

செடி கொடிகளை அறுப்பதுபோல் கனவு கண்டால்: நீங்கள் இப்போது அகப்பட்டுக்கொண்டு உள்ள பல்வேறு சிக்கல்களிலிருந்து விடுபட்டு, விரைவில் ஒரு புதிய வாழ்க்கை அமைத்துக்கொள்ள போகிறீர்கள். ஆனால் அதற்காக நீங்கள் சிறிது பாடுபட்டு உழைக்க வேண்டியது இருக்கும்.

## அற்புதச் செயல்

ஏதாவது ஓர் அற்புதச் செயல் நடப்பதுபோல் கனவு கண்டால்: நீங்கள் வெளியே சொல்லமுடியாத ஒரு பெரிய சங்கடத்தில் மாட்டிக்கொண்டிருக்கிறீர்கள். அதிலிருந்து எப்படித்

தப்புவது என்று தெரியாமல் தத்தளிக்கிறீர்கள். திடீர் என்று ஒருநாள், நீங்கள் சிறிதும் எதிர்பாராதவிதத்தில், அந்தச் சங்கடத்திலிருந்து நீங்கள் விடுதலை அடையப்போகிறீர்கள். ஆகையால் அதைப்பற்றி இப்போது வீணாக நீங்கள் உங்கள் மனத்தை அலட்டிக்கொள்ள வேண்டாம்.

ஒரு ஜாலவித்தைக்காரரைக் கனவில் கண்டால்: உங்கள் புதிய நண்பர்களில் ஒருவரை நீங்கள் இழக்க நேரிடும். அதே சமயத்தில், உங்களை நெடுநாள்களாகப் பிரிந்து இருந்த பழைய நண்பர் ஒருவர் மீண்டும் உங்களிடம் வந்து சேருவார். உங்கள் குடும்பத்தில் சிறிது குழப்பங்கள் ஏற்பட்டு பிறகு எல்லாம் சரியாகி விடும்.

## அன்பளிப்பு

நீங்கள் பிறருக்கு ஒரு பொருளை அன்பளிப்பாகக் கொடுப்பதுபோல் கனவு கண்டால்: உங்களுடைய பணக் கஷ்டங்கள் எல்லாம் விரைவில் தீர்ந்துவிடப் போகின்றன. திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் நடைபெறும்.

நீங்கள் ஒரு பொருளை அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்வது போல் கனவு கண்டால்: உங்களுக்குப் பணமுடை ஏற்படும். பிறருடைய உதவியை நாடும்படியான நிலைமை உண்டாகும். அத்தகைய நிலைமை வராதிருக்க வேண்டுமானால், இன்னும் சிறிது காலத்துக்குச் சூதாட்டம், குதிரைப் பந்தயம் போன்ற காரியங்களில் நீங்கள் ஈடுபடக்கூடாது.

உங்களுடைய சிறப்புகளைக் கருதி அரசாங்கம் உங்களுக்கு பரிசு வழங்குவதுபோல் கனவு கண்டால்: உங்களுடைய திறமைகளை வெளியே காட்டிக்கொள்ள முடியாத சூழ்நிலையில் நீங்கள் சிக்கிக்கொள்வீர்கள். ஆனால், அந்தச் சூழ்நிலை விரைவில்

மாறிவிடும். அதுவரையில் நீங்கள் சற்றுப் பொறுமையாய் இருக்க வேண்டும்.

## அன்பு செலுத்துதல்

நீங்கள் யார் மீதாவது அன்பு செலுத்துவதுபோல் கனவு கண்டால், உங்களுடைய செல்வமும் செல்வாக்கும் வளர்ச்சி அடையப் போகின்றன. காதலும் கைக்கூடும். அதுவே திருமணமாகவும் முடியும்.

## அஸ்மானகிரி

ஓர் அஸ்மானகிரியின் கீழ் அமர்ந்து இருப்பதுபோல் கனவு கண்டால்: உங்களுடைய உடல்நலத்தைப் பற்றி நீங்கள் வீணாகக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். உண்மையில் உங்களுக்கு எந்த நோயுமே கிடையாது. இல்லாத நோய்களையெல்லாம் நீங்களாகவே கற்பனை செய்து கொள்கிறீர்கள். உங்கள் மனத்தைத் திருத்திக்கொள்ளுங்கள். மருந்து எதுவும் தேவை இல்லை.

### குறிப்பு :

அஸ்மானகிரி என்பது கட்டிலுக்கு மேலே கட்டப்படுகிற அலங்காரத்துணி.

## ஆங்கிலேயன்

ஓர் ஆங்கிலேயரைக் கனவில் கண்டால்: உங்களுடைய இப்போதைய பிரச்சினை தீருவதற்கு ஒரேயொரு வழிதான் உண்டு. அதாவது, எதிரியினுடைய நிலையையும் நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவரது கட்சியில் உள்ள நியாயத்தையும் நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். அப்போதுதான் உங்கள் பிரச்சினையை நீங்கள் தீர்த்துக்கொள்ள முடியும்.

## ஆசி பெறுதல்

உங்களுக்கு யாராவது ஆசி கூறுவதுபோல் கனவு கண்டால்: உங்கள் எதிர்காலம் மிகவும் மகிழ்ச்சியுடையதாக இருக்கும். வாழ்க்கையில் நீங்கள் முன்னேற்றம் அடைவீர்கள். அதே சமயத்தில் சில போலி நண்பர்களிடம் நீங்கள் மிகவும் எச்சரிக்கையாக நடந்துகொள்ள வேண்டும். இல்லாவிட்டால், அவர்கள் உங்களைத் தவறான பாதையில் இழுத்துவிட்டு உங்களை கெடுக்க முயலுவார்கள்.

## ஆசை கிளறி

உங்கள் ஆசையைக் கிளறிவிடக்கூடிய ஒரு காட்சி அல்லது நிகழ்ச்சியைக் கனவு கண்டால்: நீங்கள் உங்கள் தரத்துக்கு ஒவ்வாத ஒரு காரியத்தில் ஈடுபடும்படியான சூழ்நிலை உருவாகி வருகிறது. அந்தச் சூழ்நிலைக்கு நீங்கள் பலி ஆகிவிடாமல், உறுதியாக நடந்துகொள்ள வேண்டும். இல்லாவிட்டால், உங்கள் செயலை எண்ணி நீங்களே வெட்கம் அடையும்படி வந்து சேரும்!

## ஆட்டோகிராப்

யாருடைய கையெழுத்தையாவது நீங்கள் கேட்டு வாங்குவது போல் கனவு கண்டால்: நீங்கள் செய்து கொண்டு இருக்கிற, அல்லது செய்ய எண்ணுகிற தொழிலில் நல்ல இலாபம் ஏற்படும். ஒரு நண்பரை நீங்கள் பிரியும்படி நேரலாம்.

உங்கள் கையெழுத்தை யாராவது கேட்டு வாங்குவது போல் கனவு கண்டால்: உங்கள் வாழ்க்கையில் சில புதிய இன்பங்கள் ஏற்படும். உங்கள் புகழ் பெருகும். அதே சமயம் சில புதிய தொல்லைகளுக்கும் நீங்கள் ஆளாக நேரலாம். ஆகையால்

புகழுக்கு ஆசைப்பட்டு, உங்களால் நிறைவேற்ற முடியாத பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளாதீர்கள்.

குறிப்பு :

ஆட்டோகிராப் என்பது, நம் உள்ளத்தைக் கவர்ந்தவர் களிடம் நாம் விரும்பி பெறுகிற கையெழுத்து.

## ஆணிகள்

இரும்பு ஆணிகளைக் கனவில் கண்டால்: பணம் கொடுக்கல், வாங்கலில் தகராறு ஏற்படும். ஆகையால் தகராறுக்கு இடமான பண விவகாரங்களை இப்போதே தீர்த்துக்கொள்ள அவசரப்படாமல் இன்னும் சிறிது காலத்துக்குத் தள்ளிப் போடுங்கள். பின்னர் அவை தாமாகவே தீர்ந்துவிடும்.

## ஆதிவாசிகள்

ஆதிவாசிகளைக் கனவில் கண்டால்: உங்களுக்கு ஒரு புதிய வருமானம் வரப்போகிறது. அந்த வருமானத்தைக் கொண்டு நீங்கள் உங்கள் கடன்களை அடைக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் அதை வேறு வகைகளில் செலவு செய்தீர்களானால் பிற்பாடு அந்தக் கடன்களை அடைப்பது என்பது மிகவும் சிரமம் ஆகிவிடும். அதனால் பல தொல்லைகளும் ஏற்படும்.

குறிப்பு :

ஆதிவாசிகள் என்போர், இந்நாட்டின் பழைமையான குடிமக்கள். அவர்கள் பெரும்பாலும் மலைகளிலும் காடுகளிலுந் தாம் வசிப்பார்கள். நீலகிரியில் உள்ள தோடர்களும், நாடோடியாகத் திரியும் நரிக்குறவர்களுங்கூட இந்த இனத்தைச் சேர்ந்தவர்களே.

## ஆபத்து

உங்களுக்கு ஏதாவது ஓர் ஆபத்து வந்துவிட்டதுபோல் கனவு கண்டால்: நீங்கள் இதுவரை ஆசைப்பட்டுக்கொண்டிருந்த இன்பங்களில் சிலவற்றை அடையப்போகிறீர்கள். உங்களுடைய செல்வநிலை கொஞ்சம் உயரப்போகிறது. ஒரு தகுதி வாய்ந்த மனிதருடைய நட்பும் தயவும் உங்களுக்குக் கிடைக்க இருக்கிறது. அவர் உங்களைப் பேராசைக்காரன் என்று எண்ணும்படியாக நீங்கள் நடந்துக்கொள்ளக்கூடாது.

## ஆயுதம்

ஓர் ஆயுதசாலையைக் கனவில் கண்டால்: உங்கள் உள்ளத்தில் இதுவரை என்ன என்ன பயங்கள் இருந்தனவோ அந்தப் பயங்களில் பல விரைவில் ஒழிந்துவிடப் போகின்றன. உங்களுக்கு எதிரிகள் குறைந்து விடுவார்கள். நீங்கள் நிம்மதியாக உங்கள் காரியங்களைக் கவனிக்கலாம்.

### குறிப்பு :

ஆயுதசாலை என்பது, பல்வேறு வகையான ஆயுதங்களும், சேமித்து வைக்கப்பட்டிருக்கும் ஓர் இடம்.

ஓர் அணுகுண்டைக் கனவில் கண்டால்: நீங்கள் சிறிதும் சந்தேகப்படாத ஒரு நபர், உங்களை ஏமாற்றுவதற்குக் காத்துக் கொண்டு இருக்கிறார்! வாய்ப்புக் கிடைத்தால் அவர் உங்களை எந்த நேரத்திலும் ஏமாற்றிவிடுவார்! இன்னும் சிறிது காலத்துக்கு நீங்கள் யாரையுமே முழுமையாக நம்பிவிடக்கூடாது.

கத்தியைக் கனவில் கண்டால்: உங்களுக்கு மிகவும் நெருங்கிய நண்பர் ஒருவரிடம் நீங்கள் சிறிது நேர்மைக் குறைவாக

நடந்துகொள்ளும்படியான ஒரு சூழ்நிலை வந்து சேரும். அதனால் உங்களுக்குக் கெட்ட பெயர் ஏற்படும். அது ஓரளவு உங்கள் முன்னேற்றம் தொழில் துறையைப் பாதிக்கலாம். அதற்கெல்லாம் இடங்கொடுக்காதவாறு நீங்கள் நாணயமாக நடந்து கொள்வதற்கே முயற்சி செய்ய வேண்டும்.

சவரக் கத்தியைக் கனவில் கண்டால்: நீங்கள் ஏதாவது ஒரு சிறிய விபத்துக்கு ஆளாகக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அப்படி விபத்து ஏற்பட்டால், சிறிய அளவு பொருள் நஷ்டமாவது ஏற்படலாம். உங்கள் உடலுக்கோ உடைமைக்கோ இடர் விளைவிக்கக்கூடிய எந்த நடவடிக்கையிலும் இன்னும் சிறிது காலத்துக்கு நீங்கள் ஈடுபடக்கூடாது.

குத்துவாளைக் கனவில் கண்டால் உங்கள் எதிரிகளைப் பற்றி நீங்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பல பேருடைய எதிர்ப்புகளுக்கும் ஆளாகக்கூடிய எந்தக் காரியத்தையும் நீங்கள் செய்யக்கூடாது. தேவையற்ற வாதங்களில் நீங்கள் கலந்துகொள்ளக்கூடாது. ஏனென்றால் முதலில் விளையாட்டாகத் தொடங்கப்படுகின்ற அந்த வாதங்கள், பிறகு பெரிய தகராறாக முற்றிவிடக்கூடும்.

## குறிப்பு :

குத்துவாளைப் பிச்சுவா, குத்துக் கத்தி, குறுங்கத்தி, கூர்க்கத்தி, தர்வான் கத்தி என்றும் சிலர் சொல்லுகிறார்கள்.

குறுந்தடியைக் கனவில் கண்டால்: உங்களுக்கு வீணான கெட்ட பெயர் ஏற்படக்கூடும். அது ஏற்படாமல் இருக்க வேண்டுமானால், வேலை இல்லாதவர்கள் பேசுகிற வம்புப் பேச்சுகளில் நீங்கள் கலந்துகொள்ளக்கூடாது. ஊர்வம்பு பேசுவதையே பிழைப்பாகக் கொண்டவர்களிடம் நீங்கள் நெருங்கிப் பழகக்கூடாது.